பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 13 வியாழக்கிழமை (27 - 01 - 2000) VALAMPURI ஒலி: 39

## ★ இனப்பிரச்சினை நிரந்தரத் தீர்வுக்கு

# தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசி சமாதானத்திற்கு வர வேண்டும்!

## தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள எந்தவொரு தீர்வையும் எட்டிவிட முடியாது. என்பதை இலங்கை வந்துள்ள நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் டெலீவ்லுாண்டியிடம் தமிழ்க் கட்சி வட்டாரங்கள் வலியுறுத்தித் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.**

**ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, புளொட் அமைப்பு ஆகியவற்றின் தலைவர்கள், டக்ளஸ் தேவானந்தா த. சித்தார்த்தன் ஆகியோரும் தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் பேச வேண்டுமென்று நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சா டெலீவ்லுாண்டியிடம் வற்புறுத்திக் கூறியுள்ளனர்.**

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடந்து வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் உலக நாடுகள் பல தீவிரமான முயற்சியில் இறங்கியுள்ளன.

அந்த வகையில் நோர்வே நாட்டைச் சேர்ந்த தூதுக்குழுவினரும், கனேடியத் தூதுக்குழுவினரும் சமகாலத்தில் இலங்கைக்கு வந்து தீர்வு முயற்சியில் இறங்கியுள்ளனர்

இலங்கைக்கு வந்துள்ள நோர்வே தூதுக்குழுவினர் நேற்று ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய தமிழ்க்கட்சிகளின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். இதன் போது 'தமிழீழவிடுதலைப் புலிகளுடன் அரசாங்கம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் கைது செய்யப்பட்ட மூவர் விசாரணைக்காக கொழும்புக்கு?

உரும்பிராயில் படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் இரண்டு பிள்ளைகளும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகளுக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

நேற்று முன்தினம் மாலை திடீரென படை வாகனத்தில் வந்தவர்களால் கைது செய்யப்பட்ட ஸ்ரீஸ்கந்தராஜா பிரியா என்ற க.பொ.த (சா/த) மாணவியும் அவரது தாயாரும் சகோதரருமே விசாரணைகளுக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (கு-வ)

### வன்னிப் பகுதிககு

## நேற்று 20 லொறி உணவுப் பொருட்கள் வெள்ளியன்று பயணிகள் புறப்பாடு!

(வவுனியா)

வவுனியாவிலிருந்து வன்னிப் பகுதிக்குத்தேவையான உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு நேற்று 20 லொறிகள் சென்றதாக வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள பயணிகளை எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுப்பி வைப்பதற்கு வவுனியா செயலகம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

## குமார் கொலை வழக்குத் தொடர்பாக மட்டக்குழியில் ஒருவர் கைது!

(கொழும்பு)

சுட்டுக்கொல்லப்பட்ட பிரபல சட்டத்தரணியும், தமிழ் காங்கிரஸ் செயலதிபருமான குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குமார் கொலைச் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரி எனக்கருதப்படும் 'சாந்த'

(6ம் பக்கம் பார்க்க)

### கொழும்பு சுற்றிவளைப்பின் போது தாயும் மகளும்

# பாலியல்வல்லுறவுக்கு உட்பட்டதால் தமிழர்கள் குழப்பமடைந்துள்ளனர்

## தமிழ்காங்கிரஸ் தலைவர் கண்டனம்

(கொழும்பு)

''கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையத்தில் வைத்து தாயும் மகளும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட செயல் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றது'' என்று சட்டத்தரணியும் மனித உரிமை வாதியுமான அ. விநாயகமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப் பொன்றில் தெரிவித்துள்ளார் இதுபற்றி மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது.

தேவையற்ற ஊரடங்கு சட்டமும், கைதுகளும் கற்பழிப்பு நோக்கோடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என விசனமடையவேண்டியிருக்கின்றது. ஊரடங்கு சட்டத்தை அடுத்து பொலீசாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து சுமார் ஐயாயிரம் பொதுமக்களை கைது செய்தனர். தாய்மாரும்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் காணாமற்போன ஒருவர் காவல் நிலையத்தில் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்ட ஒருவரைப் பொலீசார் தடுத்து வைத்துள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீரதன் தெரிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான மாதாந்த உணவுவிநியோகம் படையினரால் 379க்கு மட்டும்அனுமதி

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு மாதாந்தம் 474 லொறிகளில் அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அனுமதியளித்துள்ள போதிலும் 379 லொறிகளுக்கு மட்டுமே படையினர் அனுமதியளித்துள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கான பொருட்கள் மற்றும் மண்ணெண்ணை உரம் உட்பட அத்தியாவசியப் பொருட்களை மாதாந்தம் அனுப்பிவைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள போதிலும் படையினர் முட்டுக்கட்டை இடுவதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறீதரனின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாக அறியவருகின்றது.

கிளிநொச்சிக்கு 182 லொறிகளிலும் முல்லைத்தீவுக்கு 252 லொறிகளிலும் மன்னாருக்கு 40 லொறிகளி

(6ம் பக்கம் பார்க்க)

# இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக பொதுமக்களின் காணி சுவீகரிப்பு!

## 53 குடும்பங்கள் நிர்க்கதி

(வவுனியா)

வவுனியா தச்சன்குளம் பகுதியில் உள்ள வன்னி இராணுவக் கட்டளைத் தள விஸ்தீரணப் பணிகளுக்காக தமிழ் மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளும் குடியிருப்பு நிலங்களும் சுவீகரிக்கப்பட்டு அழிக்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாம் விஸ்தரிப்பு பணிகளுக்காக தமிழர்களின் நூற்றி ஐம்பத்தைந்து ஏக்கர் விவசாய நிலமும் அதனோடு இணைந்த குடியிருப்புக்களும் படையினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. சுவீகரிக்கப்பட்ட பகுதிக்குள் உள்ள குடியிருப்புக்களும், விவசாய நிலங்களும் டோசர் கொண்டு அழிக்கப்பட்டு வருவதாகவும், காணிகளை இழந்த 53 தமிழ்க் குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகலவிதமான ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், பாடசாலைச் சின்னம், கீற்ரேக் ஆகியவற்றை செய்திட S.S யசோதரன் ஆட்ஸ் 185, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம. (கி/ 030)

### தேவை

தேனீர் தயாரிப்பாளர் (ரீ மேக்கர்) தொடர்பு அபீஸ் கோப்பி [B] பார் 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி - 036)

### விலாச மாற்றம்

கைதடி நாவற்குழி தெற்கு கோயிலாக்கண்டியில் வசித்து வந்த யான் தற்போது தற்காலிகமாக நுணாவில் கிழக்கு நாவல்பள்ளஒழுங்கை (பத்மாவதி ரீச்சர் வீட்டில்) என்னும் முகவரியில் இருக்கின்றேன்: சி. ஜெயகணேசன், ஆசிரியர்.


யாழ். குடாநாட்டு மக்களுக்கு

# சீரான சேவையை வழங்குவதற்கு 200 பஸ் வண்டிகள் தேவையாகும்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருப்திகரமான பஸ் சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 200 பஸ் வண்டிகள் தேவையாகவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் திரு. வீ. ஏ. சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்; தற்போது இருக்கின்றபஸ்வண்டிகளை பயன்படுத்தி பொது மக்களுக்கு ஓரளவு திருப்திகரமான சேவைகளைப் பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் சபை நடாத்திவருகின்றது.

பல பாதைகளில் வீதி நிலமைகள் பஸ் வண்டிகளுக்குப் பொருத்தப்பாடாக இல்லாமல் இருப்பதால் பஸ் சேவைகளை நடாத்த முடியாமல் இருக்கின்றது. இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள பழுதடைந்த வீதிகளைத் திருத்தம் செய்து தரும்படி சம்பந்தப்பட்ட திணைக்களங்களை அடிக்கடி கேட்டுவருவதாகவும் பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தின் விஸ்தீரணம் போதாமல் இருப்பதால் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்வண்டிகளை குறிப்பிட்ட பஸ்தரிப்பு நிலையத்தில் நிறுத்த முடியாதுள்ளது. எனவே யாழ். மத்திய பேருந்து நிலையத்தினை ஐந்து ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இடத்தில் அமைக்கப்படல் வேண்டும். இத்திட்டத்திற்குப் பொருத்தமான இடமாக செம்மனியை இனங்காணலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் தொழில் திறன்மிக்க தொழிலாளர்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தொழில் திறன் மிக்கவர்களைப் பயிற்றுவிப்பதற்குரிய ஒரு பயிற்சிப் பாடசாலையை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும். அதன் மூலம் வேலையற்று இருக்கும் இளைஞர்களைப் பயிற்றுவித்துக் கொள்ளலாம்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருடன் பொதுமுகாமையாளர் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது (க-77)

## ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டன

வலிகாமம் கிழக்குப்பிரதேச சபையினால்: அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் ஆகிய பிரதேசசபை நூலகங்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளதாத் தெரிய வருகின்றது.

இந்த நூல்களுள் இலக்கியம், பொதுஅறிவு, சரித்திர நாவல்கள்போன்றவை அடங்குகின்றன.

இவ் எதிர்வரும் மாத இறுதிக்குள் மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்படும் என நூலகப் பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது. (க-57)

## நிதி சேகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் மருத்துவமனையில் நோயாளர் தங்கும் விடுதிக்கட்டடம் அமைப்பதற்காக காணிவாங்குவதற்குரிய நிதியை வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினர் சேகரித்து வருகின்றனர்.

மேலும் வேண்டிய நிதியை மக்களிடம் திரட்டப்போவதாகவும், இதற்கு மக்கள் ஒத்துழைப்புச் செய்யுமாறும் அபிவிருத்திக்குழு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது,

அத்துடன் இக்கட்டடம் கட்டுவதற்காக ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா ஏற்கனவே ஒதுக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-57)

## (இராசி பலன்)

27.01.2000 வியாழக்கிழமை

(தமிழுக்கு தை 13)

ஸப்தமி உதயம்5.55வரை; சித்திரை அதி காலை 4.23 வரை; சித்த யோகம், இராகு காலம்மாலை 2.39முதல்4.04 வரை, சுப நேரம் காலை 8.36 முதல் 10.06 வரை.

**மேடம்:** குதூகலம், வாழ்க்கைவசதி, விநோத சிந்தை.

**இடபம்:** குளம்பித் தெளிதல், பழைய உறவு, பயண நன்மை.

**மிதுனம்:** கடமை தவறுதல், பிறர் வெறுப்பு, கற்பனை.

**கடகம்:** கணவர் கோபம், அடிபணிதல், மனவிரக்தி.

**சிங்கம்:** தொழில் பாராட்டு, திட்டமிடுதல், கலகலப்பு.

**கன்னி:** பிறர் துன்பம், வீண்செலவு, அலைச்சல்.

**துலாம்:** திட்டமிடுதல், தொழில் வாய்ப்பு, நண்பர் உதவி.

**விருச்சிகம்:** விரோத உணர்வு, மனப் பதட்டம், வேதனை.

**தனுசு:** ஞான சிந்தனை, புத்திரர் உதவி, பயண அனுகூலம்.

**மகரம்:** குடும்ப உற்சாகம், கடமை உணர்வு, புதிய செய்தி.

**கும்பம்:** மன பேதலிப்பு, விலகிப் போதல், காரியத் தடை.

**மீனம்:** அவலப்படல், தொழில் கஷ்டம், வெறுப்பு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## நூல் வெளியிட முயற்சி

(தென்மராட்சி)

சமாதானமும் சகிப்புத்தன்மையும் எனும் தலைப்பில் தென்மராட்சி கல்வி வலயம் ஒரு நூல் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இந்த நூல் தென்மராட்சி கல்வி வலயத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரிய சமூகத்தினர் மத்தியில் சமாதானத்தைப் பற்றியும் சகிப்புத்தன்மை பற்றியதுமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கம் எனவும் அறியப்படுகின்றது. (க-77)

## சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு வழிகாட்டல் குறிப்புகள் வழங்கல்

(வட்டுக்கோட்டை)

★ யாழ்மாவட்டத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டி ஒன்று சமுர்த்தி அதிகார சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் அவர்களுக்கான கடமைகளும், பொறுப்புக்களும் பற்றி கூறப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு.

★ சமுர்த்தி அ. உத்தியோகத்தரின் அலுவலகம் அவர்களின் கடமைப் பிரதேசத்தில் பேணப்பட வேண்டும்.

★ அவர்கள் வாரத்தின் திங்கட் கிழமையை அலுவலக் தினமாக பேணிவரவேண்டும் அத்துடன் ஞாயிறு தவிர்ந்த ஆறுநாட்கள் வேலையிலீடுபடவேண்டும்.

★ அவர்கள் வியாழக்கிழமைகளில் நடைபெறும் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டும். இதற்கு சமுர்த்தி முகாமையாளர்கள் தலைமைவகிப்பார்கள்அத்துடன்மாதாந்த முன்னேற்ற கூட்டங்களில் பங்குபற்றவேண்டும். இது பிரதேச செயலாளரால் நடாத்தப்படும்.

★ அரசாங்க அல்லது கடமை தொடர்பான வைபவங்களின் போதோ அல்லது பிரதேச செயலகத்திற்கு, வலய அலுவலத்திற்குத் செல்லும் வேளையில் ஆண்கள் ரியூனிக் கொலரைக்கொண்ட வெள்ளை நிற சேட்டும். பெண்கள் நாவல் நிறச்சேலையும் அணிந்திருக்க வேண்டும்.

★ மற்றும் சமுர்த்தி நலனுதவிநலன்புரி செயற்பாடுகள், சமுர்த்திச் செயலணி, சமுர்த்திச் சங்கம், சமுர்த்தி வங்கிச் சங்கம். சமூக அபிவிருத்தி பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமுர்த்தி ஊக்குவிப்பாளராக கடமையாற்றியோரே சென்ற டிசம்பரிலிருந்து சமுர்த்தி அ. உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-24)

## சிற்பிகளுக்கு அழைப்பு

(ஈச்சமோட்டை)

சினாவில் உருவாக்கப்படவுள்ள சிற்ப நூதனசாலையில் சிற்பங்களை வடிவமைப்பதற்காக இலங்கைச் சிற்பக் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கோரியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இல- 65, ஹய்லெவல் றோட், மகரகம என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(கு - 5)

## இந்திய - பாகிஸ்தான் முறுகல் நிலை கிரிக்கெட் ஆடுகளத்திலும் தொடர்கிறது

(புதுடில்லி)

இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான பதற்ற நிலை இரு நாடுகளும் பங்கு கொள்கின்ற கிரிகெட் ஆடுகளத்திலும் பரவியுள்ளது.

நேற்றுமுன்தினம் அவுஸ்திரேலியாவின் அடிலைன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச முக்கோணச் சுற்றுப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்ற போதிலும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் இந்திய கிரிக்கெட் வீரர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

இந்திய அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் பந்தின் உருவத்தைச் சீர்குலைக்க முயன்றார் என்று, இந்திய வீரர்கள் தம் மீது தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர் என்றும், பாகிஸ்தான் அணியினர் ஆட்ட நடுவரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

போட்டியின் பின் இரு தரப்பிலும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து நடுவர் கெமிஸ்மிஸ் பாகிஸ்தான் முறைப்பாடு செய்திருப்பதை உறுதிசெய்திருக்கிறார்.

இதேவேளை, இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் மேற்படி முறைப்பாடுகளுக்கு மறுப்புத் தெரிவித்ததுடன் இதனால் தாம் அதிர்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் பாகிஸ்தான் அணித்தலைவர் வாசிம் அக்ரம் இதுபற்றிக் கருத்துக்கூற மறுத்ததோடு, தாம் சொல்ல வேண்டியதை ஆட்ட நடுவரிடம் கூறிவிட்டோம் என்றும் தெரிவித்துள்ளார்.

(க-9)

## கோட்டக்கல்வி அதிகாரி நியமனம்

(அல்லைப்பிட்டி)

ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரியாக காரை நகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் என். பரமசிவம் தீவக வலயப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனால் நியமிக்கப் பட்டுள்ளார்.

அதேவேளை பெப்ரவரி முதலாந் திகதி தொடக்கம் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலகம் இயங்குவதற்குத்தேவையான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துவிட்டன என கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்துஉள்ளார். (க-46)


## இன்று வெளிவருகின்றது

க. பொ. த உயர்தரம் 2000, 2001, 2002 மாணவர்கள் அனைவரினதும் வேண்டுகோளுக்கிணங்க

பொதுச் சாதாரணப் பரீட்சை

### வழிகாட்டி நூல்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றால் வெளியிடப்பட்ட மாதிரி வினாத் தாள்களுடன் மேலும் பல முன்னோடி வினாத் தாள்கள் மற்றும் மிலேனியச் செய்திகள், பொது விழிப்புகள், பாடத்திட்டம் வினாத்தாள் கட்டமைப்புப் போன்றவற்றை விரிவான முறையில் உள்ளடக்கியுள்ளது.

ஆக்கம்

**P. உமாசங்கர் & P. கமலதாசன்**

கிடைக்கும் இடங்கள்:

★ யாழ். குடாநாட்டின் பிரபல புத்தக சாலைகள்

★ யாழ். குடாநாட்டின் பிரபல பாடசாலைகள்

★ யாழ். குடாநாட்டின் பிரபல தனியார் கல்வி நிறுவனங்கள்

★ தீவகத்தில் - மணி கல்வி நிறுவனம்
- வேலணை
- ஜீவபாரதி கல்வி நிறுவனம்
- நயினாதீவு

★ மற்றும் வடமராட்சி - இணை ஆசிரியர்கள் S, யசோதரன் - பிரபாகரன் ஆகியோரால் விநியோகிக்கப்படுகின்றது

(கி035)

## வேகமாக பரவும் மலேரியா

(அச்சுவேலி)

அச்சுவேலியில் உள்ள தம்பாலை கதிரிப்பாய், வரன், வளலாய்ப் பகுதிகளில் மலேரியாக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

அண்மையில் பெய்தமழையினால் தேங்கி நிற்கின்ற வெள்ளத்தில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதே மலேரியாக்காய்ச்சல் பரவுவதற்கான காரணம் என்று நம்பப் படுகிறது.

இதேவேளை ,நுளம்புப் பெருக்கத்தினை தடுப்பதற்கான மலத்நியோன் தெளிப்பு நடவடிக்கை இப்பகுதியில் நீண்டகாலமாய் மேற்கொள்ளப்படாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-57)

## நோயாளர் சிரமம்

(சாவகச்சேரி)

தென்மராட்சியின் கரையோரப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து, சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையின் பின்னுள்ள கட்டடங்களில் தங்கி இருக்கின்ற மக்களால், வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## நெடுந்தீவில் மீனுக்கு தட்டுப்பாடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பிடிக்கப்படும் மீன்கள் இலாப நோக்கம் கருதி வேறு பகுதி மீன் வியாபாரிகளிடம் விற்பனை செய்யப்படுவதால் உள்ளூர் நுகர்வோர் பெரும் மீன் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ளும் அவல நிலை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

வியாபாரிகள் சந்தைகளிலோ அல்லது வழமையான இறங்கு துறைகளிலோ வைத்து மீனவர்களிடம்மீனை கொள்வனவு செய்யாமல் தீவின் வெவ்வேறு கரைகளிலும் மாறி மாறிச் சென்று கொள்வனவு செய்வதினாலேயே இந்த நிலை உருவாகியுள்ளது.

இதனால் உள்ளூர் மக்கள் வழமையான இடங்களுக்கு மீன் வாங்கச்சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையினை சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு சுட்டிக்காட்டியும் உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை என நெடுந்தீவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-82)

# பருத்தித்துறை வைத்தியசாலை

# வைத்தியரை மீண்டும் நியமிக்கவும்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்கிளையினர் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிறந்த முறையில் பணியாற்றிய வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாளை திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட நிகழ்வினால் அவரது சேவையால் வளம்பெற்ற இவ் வைத்தியசாலை வெறிச்சோடிக் காணப்படுகிறது. எனவே அவரை மீண்டும் அவ் வைத்தியசாலைக்கு நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் யாழ். கிளையின் பருத்தித்துறை பிரிவினர் யாழ்ப்பாணத்தில் செயற்படும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஒரு பெரிய சேவை நிறுவனம். முன்னைய காலங்களில் வைத்திய நிபுணர், சத்திரசிகிச்சை நிபுணர், மனநோய் நிபுணர் (வைத்திய கலாநிதி அருளம்பலம், வைத்திய கலாநிதி கதிர்காமசேகரம்) தாய்சேய்நலநிபுணர் 15க்கு மேற்பட்ட வைத்திய அதிகாரிகள் கடமையாற்றிய காலமொன்றுண்டு.

நாட்டின் தற்போதைய நிலையில் கிடைப்பவற்றை நல்ல நிலையில் பேண வேண்டுமென்பது எங்களதும் தங்களதும் கடமையாகும்.

எனவே இவ் வைத்தியசாலையைப் பொறுத்தவரை வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாள் நல்ல நிர்வாகி. தன் உடல் வளத்தால் சேவை மனப்பான்மையால் மக்களுக்கு நிறையச் சேவை செய்ய விரும்புவார். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலி, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய எல்லாப் பகுதி மக்களும் அவரது சேவைவய விரும்புகிறார்கள். எனவே பருத்தித்துறை மாவட்ட ஆதார வைத்தியசாலைக்குப் பொருத்தமானவர் அவர் ஒருவரே.

இரத்த வங்கியை இயங்க வைக்கவும் கேட்டுக் கொள்கின்றோம். எமது நிறுவனம் கடந்த காலங்களில் இரத்த வங்கிக்கு நிறைய உதவிகள் புரிந்து வந்திருக்கிறோம். என்பதையும் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

தயவு செய்து எமது வேண்டுதல்களை நிறைவேற்றி உதவும்படி மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி வணிகர் சங்கம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் போன்றவை மேற்படி வைத்திய அதிகாரியின் இடமாற்ற உத்தரவுக்கு தமது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதன் பிரதிகள் பருத்தித்துறைபகுதி ஈழமக்கள்ஜனநாயககட்சியினருக்கும் அனுப்பப்பட்டுள்ளதும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

## கொழும்பு நகரில் தொடரும் குண்டுப் புரளியால் பொலிசார் சிரமம்

(கொழும்பு)

சமீப காலத்தில் கொழும்பு நகரில் குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து சிலர் வேண்டும் என்று குண்டு என்று நம்பக் கூடிய விதத்தில் பல இடங்களிலும் பொதிகளை வைத்து புரளி செய்ய முயல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கறுவாக்காட்டுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் படி தகவல் கிடைத்தவுடன், குண்டு செயலிழக்க வைக்கும் குழுவினருடன் அங்கு சென்ற பொலிஸாருக்கு, அந்த இடத்தில் கருங்கல் ஒன்று மாத்திரமே இருந்தது. ஏமாற்றம் அடையச் செய்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இச் சம்பவங்களையடுத்து கொழும்பு நகரிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் உண்மையான குண்டு ஆபத்துக்களை கண்டு அறிய முடியாமல் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புக்கு பாரிய பங்கம் ஏற்படுவதாக பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர். (க-5)

## கனேடிய அதிகாரி மட்டக்களப்பிற்கு இன்று நேரடி விஜயம் மேற்கொள்வார்

(மட்டக்களப்பு)

கனேடிய வெளிநாட்டமைச்சின் இலங்கை இந்தியா விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி றொபேட் பேர்லி இன்று வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன் கனேடிய தூதரக முதலாவது செயலாளர் கிலன் கொட்ஜிங்கும் விஜயம் செய்ய உள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம், திருமலை மட்டக்களப்பு ஆயர் கிங்கிஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, பிரஜைகள் குழுத் தலைவர் பாதர்மில்லர் உட்பட பல முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளார்.

தற்போதையமட்டக்களப்பு அரசியல் நிலைமை, மனித உரிமை மீறல்கள் மற்றும் போரினால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாகவும் மேற்படி குழுவினர் ஆராயவுள்ளனர். (க-4-60)

## இளைஞனை காணவில்லை

கைதடி கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம். சிவகரன் (25 வயது) கடந்த 21 ஆம் திகதி முதல் காணவில்லையென அவரது பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தனியார் கல்வி நிறுவனமொன்றில் கடமையாற்றும் இவரை விசாரணைக்காக வருமாறு இராணுவத்தினர் அழைத்திருந்தனர். என்று தெரிவித்துள்ள இவரது பெற்றோர்கள் இதுவரை தமது மகனைப் பற்றி எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையென்று தெரிவித்துள்ளனர்.

## வடக்கு - கிழக்கில்

## சனத்தொகை மதிப்பீடு செய்ய பாதுகாப்பு காரணங்கள் இடைஞ்சல்

(கொழும்பு)

கடந்த 20 வருடங்களின் பின்னர் மீண்டும் அடுத்த வருடம் மார்ச் மாதம் அளவில் இலங்கையில் சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ள சனத்தொகை புள்ளி விபர மதிப்பீட்டுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இருப்பினும் இத்தீர்மானத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிக்கல்கள் பலவற்றை எதிர்நோக்கவேண்டி இருக்கும் எனவும் மேற்படி திணைக்களம் அறிவித்துள்ளது.

சனத்தொகை மதிப்பீடு மாலை 6 மணி முதல் 12 மணிவரையே நடாத்தப்பட வேண்டும். ஆனால் வடக்கு-கிழக்கில் ஊரடங்கு அமுலில் இருப்பதால் இந்த நடைமுறை சாத்தியப்படக்கூடிய வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றது.

நில அளவைத் திணைக்களங்களிலிருந்து பெற்றுக்கொண்ட வரை படங்களை வடக்கு - கிழக்குக்கு அனுப்பி வைப்பதற்குப் பாதுகாப்பு காரணங்கள் தடைபோடுவதால் அந்தந்தக் கிராமசேவையாளர்களிடமே கிராமசேவகர் பிரிவு எல்லை குறிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சனத்தொகை கணக்கிடுவதற்கு இன்னும் 14 மாதங்களே உள்ளன ஆனால் நாட்டில் அமைதி சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே சுமுகமான கணக்கெடுப்பை நடத்த இயலும் எனவும் புள்ளிவிபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இப்புள்ளி விபரங்களை நாடுமுழுவதிலும் மேற்கொள்ள 30 கோடி ரூபா செலவாகும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-9)

## பரீட்சை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் கடந்த 45 வருடங்களாக நடாத்தி வரும் பாடசாலை மாணவர்களுக்கான சைவ சமய அறிவுப்பரீட்சை ,பண்ணிசைப்போட்டி மற்றும் திறந்தமுறையிலான செய்முறைப் பரீட்சைகள் இம்முறையும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்களை ஆலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் பரீட்சையில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மகாசிவராத்திரி தினத்தன்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (க-22)

## துர்நாற்றம் வீசுகிறது

யாழ்ப்பாணம் பழைய மாநகரசபை அமைந்திருந்த பகுதியை சுற்றி, இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற மாடுகளின் கழிவுப் பொருட்கள் வீசப்படுவதால் அப்பகுயில் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உரிமைகள் பற்றிய மாவட்ட மட்ட கண்காணிப்புக்குழுக் கலந்துரையாடல் நாளை 28ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை 2.30மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்டக் குழுவினரின் எதிர்கால நடவடிக்கைகள் உட்படபல்வேறு விடயங்கள்கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (க)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் சங்கத் தலைவி டாக்டர் திருமதி. ஸ்ரீபதி அமிர்தபூபதி தலைமையில் 23 ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக கோப்பாய் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஐங்கரவேல் மற்றும் சரஸ்வதி சனசமூக செயலாளரும், மாதர் சங்க போஷகருமான திரு.த. ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திருமதி சத்தியேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் செல்வி சசிலதா ஆறுமுகம், பொருளாளர் திருமதி இந்துமதி வரதராசா உபதலைவர், திருமதி லலிதாம்பிகை பாலசுப்பிரமணியம், உபசெயலாளர் செல்வி சசிகலா தம்பித்துரை. (க)

## 323 பேர் சான்றிதழ் பெற்றனர்

(மந்திகை)

சென்ற ஒரு வருடத்தில் மட்டும் யாழ். பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கள் அலகின் வடமராட்சிப் பிரிவில் 323 மாணவர்கள், பல்வேறு கற்கைநெறிகளிலும்தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.

இதில் ஆங்கில கற்கை நெறியில் 216 மாணவர்களுக்கும். அலுவலக முகாமைத்துவ கற்கை நெறியில் 107 மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை புகைப்படக் கற்கை நெறிக்கு நூற்றுக் கணக்கானோர் விண்ணப்பித்த போதும், அக் கற்கை நெறியினைப் பயிற்றுவதற்கான போதிய வளங்கள் இன்மையால் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-23)


யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் சுவட்டு மைதானப் போட்டி 2000**

இடம்:- கல்லூரி மைதானம்
காலம்:- 2000.01.27 வியாழன்பி.ப. 1.30மணி
தலைவர்-: திரு. சு. புண்ணியசிலன் (அதிபர்)
பிரதம விருந்தினர்:- திருவாட்டி பத்தினியம்மா திலகநாயகம் போல் (பிரதேச செயலர், தெல்லிப்பழை)
சிறப்பு விருந்தினர்:- திரு.ஆ.வ. கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. வி. பாலசிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. — அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(0124)

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு அவசியம்

(புலோலி)

"பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பங்கு கொள்வதற்கு புதிய கல்விச் சீர்திருத்தம் பல வழிகளைத் தந்துள்ளது. எனவே பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் வேண்டிய பங்களிப்புகளை மேற்கொண்டு அவர்களின் வாழ்க்கையை வளம் படுத்தத் தவறக்கூடாது"

இவ்வாறு பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவிலே உரையாற்றிய பருத்தித்துறை கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு எம். ஸ்ரீபதி குறிப்பிட்டார். திரு. எம். ஸ்ரீபதி மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

பெற்றோர்கள் பாடசாலைகளுக்குத் தங்களால் இயல்பு நிலைகளுக்கேற்ப சிறுகச் சிறுகவாகிலும் உதவுவது சாலச் சிறந்ததாகும்.

தரம் 1-ல் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து வீடு திரும்பும் போது என்ன படித்தீர்கள் என்பதற்குப் பதிலாக என்ன விளையாடினீர்கள் எனக் கேட்க வேண்டும். அவ் விளையாட்டுக்கள் சம்பந்தமாக பிள்ளைகளுடன் சம்பாசிக்கும் போது பிள்ளைகள் ஏற்றுக் கொண்டதை அனுமானிக்க முடியும்.

தரம் 1-ல் கல்விகற்கும் மாணவர்களின் வகுப்புகளுக்குப் பெற்றோர்கள் சிரமமான முறையில் முறை எடுத்து வந்து வகுப்பில் நிகழும் நிகழ்வுகளை அவதானிப்பதன் மூலம் உங்கள் பிள்ளைகளின் விமோசனத்திற்கு உங்களால் வழிகோலமுடியும்.

இன்றைய மாணவர்களை எதிர்காலத்திற்கான தலைசிறந்த நாட்டிற்குகந்த பிரஜைகளாக உருவாக்க புதிய கல்வித் திட்டம் பல்வேறு வகைகளில் வழிவகுக்கின்றது என்றார். (க-52)

## இருபாலை கிழக்கு மக்களுக்கு தண்ணீர் பவுசர், லாண்ட்மாஸ்டர் வழங்கல்

(அச்சுவேலி)

இருபாலை கிழக்கு வசந்தபுரம், ஆனந்தபுரம் போன்ற இடங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் தண்ணீர் பவுசரும் லாண்ட்மாஸ்டர் ஒன்றும் அண்மையில் அன்பளிப்பாக கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வி.கே. கணேசலிங்கம் இருபாலை கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கத்திடம் இப் பொருட்களைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரிவுச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் வை. தியாகராசா ஏனைய பிரதேச சபைத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். (க-57)

## பனம் சாராயத்திற்கு விரைவில் வரி அறவிடப்படவுள்ளது

(இளவாலை)

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பனம்சாராயத்திற்கு இவ்வருடம் முதல் வரி அறவிட இருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருகையில்; கொழும்பில் இருந்து குடிவகைகள் இறக்குமதி செய்யப்படுவதனால் பனம்சாராயத்தின் விற்பனை குறைந்தே காணப்பட்டன.

ஆனால் தற்போது வரி அறவிட இருப்பதால் இறக்குமதி செய்யப்படும் குடிவகைகளின் விலையும் பனம் சாராயத்தின் விலையும் சமனாக இருக்கும் என்றும் இதனால் இதன் விற்பனை பாதிக்கப்படும் என்று அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் யாழ். குடாவில் உற்பத்தி செய்யப்படும்பனம் சாராயத்திற்குதெற்கில் நல்ல கிராக்கிகாணப்படுவதாகவும் அவ்வட்டாரத்திலிருந்து அறியமுடிகின்றது. (க-12)

## இலங்கையில் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்றில் பின்பே தேர்தல்

(கொழும்பு)

குறித்த காலத்திற்கு முன் பொதுத்தேர்தலை நடத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. புதிய அரசியலமைப்பு திருத்த யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபின்னரே தேர்தல் குறித்து அரசாங்கம் தீர்மானிக்கும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்கும் நோக்கமும் அரசாங்கத்திற்கு கிடையாது. ஆகஸ்ட் மாதத்திலே பாராளுமன்ற நிர்வாக காலம் முடிவடைகிறது. அதற்கு நெருங்கிய ஒரு திகதியில் தேர்தல் நடாத்தப்படும்.

அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பொன்றிற்கு தயாராகி வருவதாக அண்மைக்காலங்களில் வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது.

உரியகாலத்தில் தேர்தல் நடைபெறுமெனினும் இது குறித்த இறுதிமுடிவு இது வரை எட்டப்படவில்லை.

பாராளுமன்றத்தை முன் கூட்டியே கலைத்து தேர்தல் நடாத்தப்போவதாக வெளிவந்த செய்தியிலும் உண்மைகள் கிடையாது. அவ்வாறு பாராளுமன்றத்தை முன்கூட்டியே கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. ஆனால் அத்தகைய அவசியம் இப்போதைக்கு ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-14)

## வடமராட்சி கிழக்கில் சீரான பஸ்சேவை இல்லாது அப்பகுதி மக்கள் கவலை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வரையான பஸ் சேவையை நடத்துவதில் தொடர்ந்தும் இழுத்தடிப்பு நிலவி வருகிறது.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பஸ் சேவை ஒன்றை நடத்துமாறு இப்பகுதி பொது அமைப்புக்கள். பொதுமக்கள் ஆகியோர் நீண்டகாலமாக கோரி வந்தனர்.

ஆனால் இதுவரை பஸ் சேவை நடத்தப்படவில்லை வீதி சீர் இன்மையால் பஸ் சேவை நடத்த முடியவில்லை என பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச் சேவை நடைபெறாமையால் நாற்றுக்கணக்கான மக்கள் தினமும் பாதிப்படைகின்றனர். (க-43)

## பூர்வாங்க ஏற்பாடுகள்

(வரணி)

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிக்கு நேரடி 24 மணிநேர மின்விநியோகம் மேற்கொள்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இலங்கை மின்சாரசபையால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-28)

## விடுதலை செய்யப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வெள்ளாந்தெரு யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த் இரத்தினம் இரகுநாதன் அண்மையில் அவரது மனைவி முன்னிலையில் ஊரெழு இராணுவ முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி இவர் ஊரெழு இராணுவ முகாமைச் சேர்ந்த துருப்பினரால் கைதுசெய்யப்பட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-14)

---

### குடியரசு தினத்தையடுத்து

## புதுடில்லி உட்பட முக்கிய நகர்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

(புதுடில்லி)

குடியரசு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானியர் சிலரிடமிருந்து ஆர்.டி.எஸ். ரக வெடிமருந்துகள் கைப்பற்றப் பட்டதையடுத்து புதுடில்லி நகரம் முன் எப்போதுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு தின வைபவங்களை குழப்பும் வகையில் தீவிரவாதிகள் மேற்கொள்ள விருந்த பல குண்டுவெடிப்பு சம்பவங்களும் தவிர்க்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் நடைபெறக் கூடும் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்புநடவடிக்கைகளைபலப்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## தேவையேற்படின் பாகிஸ்தானுடன் யுத்தம் புரிய நாம் தயங்கமாட்டோம்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் அமைதியான சூழலை உருவாக்கவே இந்தியா விரும்புகிறது. அதே சமயம் தேவையேற்பட்டால் போர் உட்பட எந்தச் சவால்களையும் சமாளிக்க தயாராகவே இருக்கின்றதுஎன்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அறிவித்திருக்கிறார்.

சில்லாங் என்ற இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் பாகிஸ்தானே இந்திய விமானத்தை கடத்தியது என்பதை நாம் எப்போதோ புரிந்துகொண்டுவிட்டோம். இவர்கள் எமது விமானத்தை கடத்தினலும் கூட அதை வெற்றிகரமாய் முறியடித்து விடுவோம்.

காஷ்மீர் பகுதியில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு ஆயுதம் மற்றும் நிதியுதவி வழங்கி இந்தியாவில் வன்முறையைத் தூண்டிவிடுவதும் பாகிஸ்தானே எனக்குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை இந்தியப் படையினர் காஷ்மீரை ஒட்டிய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டினால் இந்தியாவுக்கு முறையான பாடம் படிப்பிப்பேன் என பாகிஸ்தான் பத்திரிகையான 'தே நேஷன்'க்கு அளித்த பேட்டியில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரவ் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## பயங்கரவாத அச்சுறுத்தல்விடயத்தில் சீனா-ரஷ்யா ஒரே நிலைப்பாடே

(மொஸ்கோ)

பயங்கர வாதம் போன்ற அச்சுறுத்தல் விவகாரங்களைச் சமாளிப்பது குறித்து சீனாவும் ரஷ்யாவும் ஒரே நிலைப்பாட்டையே கொண்டிருப்பதாக ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனப்பாதுகாப்பு அமைச்சர் சீ ஹோஷன் ரஷ்ய பதில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடனான சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

செச்சினியாவில் மேற்கொண்டுள்ள ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு சீனா தனது முழுமையான ஆதரவை நல்குவதுடன் சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் பொருளாதார அரசியல் உறவுகளை விரிவுபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கிரெம்ளினில் ரஷ்ய பதில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும்சீனாவின் பாதுகாப்புஅமைச்சிற்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் போதுஇரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக நிலவிவந்த கசப்புணர்வை போக்கி நல்லதொரு உறவிற்கு அடித்தளமிட்டதற்காக சீனா ஜனாதிபதி ஜியாங் செமினையும் முன்னாள் ரஷ்ய ஜனாதிபதியையும் புட்டின் பாராட்டி உள்ளதாகவும் தெரிய வருகிறது. (க-9)

## கிறிஸ்தவ முஸ்லிம் வேறுபாடுகளை நீக்க இந்தோனேசிய துணை அதிபர் விஜயம்

(ஜகார்த்தா)

மலுக்குத்தீவில் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் தோன்றி இருக்கின்ற கருத்து வேறுபாடுகளைக் களைந்து அவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக இந்தோனேசிய துணை அதிபர் சுகர்ணோ புத்ரிமலுக்குத் தீவுக்குப் பயணமானார்.

நேற்று முன்தினம் மலுக்குத். தீவில் இருசாராருக்கும் இடையே மீண்டும் பதற்றம் நிலவியதைத் தொடர்ந்தே துணை அதிபரின் பயணம் விரைவு படுத்தப்பட்டதாக தெரிய வருகிறது.

இதேவேளை, ஹரித்தீவில் கிறிஸ்தவர்கள் வாழும் கிராமங்களை ஆயிரக் கணக்கான ஆயுதம் தாங்கிய முஸ்லிம்கள் தாக்கியதில் 20 கிறிஸ்தவப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், ஷெரன் தீவில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றபோதும் சேத விபரம் எதுவும் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

### புருண்டியில்

## ஆயுத குழுவினரின் தாக்குதலிற்கு முப்பதிற்கும் மேற்பட்டோர் பலி!

(நைரோபி)

கிழக்கு புருண்டியின் ருடானா எனும் இடத்தில் ஆயுதமேந்தியவர்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 30 பேர் வரையில் கொல்லப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பகுதியைச் சேர்ந்த 1600 வீடுகளைச் சேதமாக்கிய ஆயுதம் ஏந்திய நபர்கள் பொது மக்களுடைய கால் நடைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதனால் நிர்க்கதி நிலைக்குள்ளான பெருமளவு மக்கள் தன்ஸானியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (க-9)

இறைகாக்கும் வையக
மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச்
செயல்.
- குறள்

# வலம்புரி

## நிம்மதி தரும் குடை நிழல்கள்

காலத்தின் தேவையை உணருகின்ற நிர்வாகக் கதிரைகளே எமக்குத் தேவை. வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் செயல்கள் அறவே மறக்கப்பட வேண்டும், மறுக்கப்படவும் வேண்டும் இழப்புக்கள் என்று கூறும் போது அவற்றை வகைப்படுத்துவதே வேதனை தருவதொன்று. இந்தச் சூழலில் வாழ்கின்ற எம்மவர்க்கு எம்மின ஆட்சி பீடங்கள் நல் வழிகாட்ட வேண்டும். அணைந்து அணைத்துக் கொள்கின்ற மனப்பக்குவமும் தேவைப்படுகிறது.

அண்மையில் வலிகிழக்குப் பிரதேசத்தில் முயற்சித் திருவினையால் பொலிவுற எழுந்து நின்றது கோப்பாய் பிரதேச செயலர் பணிமனை. அதன் திறப்பு விழாவின் போது அரச அதிபர் சண்முகநாதன் விழாக்களிலும் பார்க்க செயல்களே இந்த மண்ணுக்குத் தேவை. என்று கருத்தொடு கழறியிருக்கிறார். அந்த உயரிய சிந்தனைக்கு மண்ணின் மக்கள் சார்பில் வலம்புரியின் வாழ்த்துக்கள்.

எந்தத் துறையிலாயினும் உயர்கதிரையில் இருப்பவர்கள் மக்களை உரிய கண்ணோடு பார்க்க வேண்டும். அதிகார வெறியோடு ஏனோ தானோ என்று அரசின் ஊதியம் மட்டும் பெறும் நோக்கோடு இருக்கக் கூடாது. வேதனை விளிம்பில் வெதும்புகின்ற மக்களுக்கு சாதனைகள் பல புரிய வேண்டும்.

பிரதேசங்களின் பாரம்பரியங்கள் அழிந்து போகின்ற அவலநிலை. சுவடு தெரியாது சுடுகாடாகின்ற எங்கள் மண்ணின் விழுமியங்கள் மறைக்கப்படுகின்ற பரிதாப நிலை, இந்த வேளையின் இன்னுமோர் நிர்வாகக் கதிரையின் எழுத்தறி சிந்தனையை, தீர்க்க தரிசன உந்துதலை புதுவழியை - நன்முயற்சியை ஈண்டு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரதேச மலர் ஒன்று உருவாக்கும் முயற்சியில் முனைந்து நிற்கின்றார். காங்கேசன் கல்வி மலர் மலர்ந்த பிரதேசமது. அவர் தம்பணி சிறக்க எம் பாராட்டுக்கள்.

உயரிய சிந்தனைகள், உண்மை உழைப்புக்கள் உணவுக்கு உப்பிட்டது போல அவலம் நிறைந்த மக்களின் வாழ்வுக்கு ஒளிகாட்டுவதாய் அமைய வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# 1965 இல் டட்லி - செல்வா ஒப்பந்தம் பேரினவாத சிங்களத் தலைவர்களால் கைவிடப்பட்டது

- சமாதானப் பேரவை

**தமிழ்ப் பகுதிகளில் செய்யப்பட்ட சிங்கள குடியேற்றமானது தமிழ்ப் பிரதேசங்களைஆக்கிமிரத்தல் மட்டுமின்றி அவர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கை பல வீனப்படுத்துவதற்கு எடுககப்பட்ட முயற்சியின் தொடர்ச்சி.**

**மொழிமாற்றம்- ஆனந்தன்.**

**1965ல்** அன்றைய பிரதமராக இருந்த திரு டட்லி சேனநாயகா அவர்களுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு மிடையில், தமிழ் மொழிக்கு உரியஇடம் வழங்கல்: அதிகாரங்கள் வடக்குக்கிழக்குப் பிரதேசங்



எஸ்ஜேவி செல்வநாயகம்

களின் காணி மற்றும், தமிழ் குடியேற்றங்களை நிறுவுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஓர் ஒப்பந்தம் ஒன்று உருவானது இதில் பிரதமர் டட்லியும் எஸ்.ஜே. வி. செல்வநாயகமும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டது இதன் பலனாகத் தமிழ் மொழி அமுலாக்கல் அரசாங்க வர்த்தகமானி மூலம் 1966ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது. எனினும் அது அமுல்படுத்தப்படவில்லை, அது மட்டுமல்லாமல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போக்கினால் டட்லி — செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டது. இந்நிலையில் தமிழ் அரசுக்கட்சி அரசில் இருந்து வெளியேறியது.

### குடியரசு அரசியல் அமைப்பு

1972ம் ஆண்டு மே மாதம் இலங்கையின் குடியரசு அரசியல் அமைப்புச்சட்டம்ஜனாதிபதி சொல்வின் ஆர்.டி.சில்வாவினால் உருவாக்கப்பட்டது. இவ்வரசியல் அமைப்பில் பின்வரும் யோசனைகளை உள்ளடக்குமாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி யோசனை தெரிவித்தது.

★ தமிழ், சிங்கள முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய சுயாதிபத்தியம் உள்ள சமஷ்டி அரசியல் அமைப்பு.

★ தமிழ் மொழிப்பாவனை விஷேட ஏற்பாடுகள் கூட்டம் அரசியல் அமைப்பிற்குள் உள்ளடக்கப்பட வேண்டும்.

★ தாய் மொழி மூலம் சகல பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்விமொழியாதல் வேண்டும்.

இக் கோரிக்கைகள் அரசியல் நிர்ணய சபையால் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணயு சபையில் இருந்து விலகினர்.

புதிதாக உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து இவர்கள் வெளியேறினார்கள் இவ்வரசியல் அமைப்பு பாராளுமன்றத்தில் பெரும்பாண்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

### தமிழ்க்கட்சிகளின் ஆறு அம்சத்திட்டம்

1972-ம் ஆண்டு மேமாதம் தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அடங்கிய ஆறு அம்சத் திட்டமொன்றைத் தயாரித்து அரசுக்கு சமர்ப்பித்தனர். அத்திட்டத்தில், தமிழ் மொழிக்கு சம உரிமை; சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் பிரஜாவுரிமை மதச்சார்பற்ற அரசு, நாட்டின் சகல மக்களினதும் உரிமை அரசியல் அமைப்பு மூலமாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்; சாதிமத பேதங்கள் அகற்றப்பட வேண்டும்; பரவலாக்கப்பட்ட அரச கட்டமைப்பு என்பன வரையறை செய்யப்பட்டிருந்தன.

### பல்கலைக்கழக தரப்படுத்தல்

பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் அதிக



ஜி. ஜி. பொன்னம்பலம்

புள்ளிகள் பெறவேண்டும் மென்ற பல்கலைக்கழக சட்டம் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில், கடும் எதிர்ப்புக் கிழம்பி இருந்தது. தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கான உரிமையை மட்டுப்படுத்துவதற்காக இது கொண்டுவரப்பட்டதாக தமிழ் மக்கள் அரசின் மீது குற்றம் சுமத்தினர். இதனால் தமிழ் மாணவர்கள் மத்தியில் போராட்ட உணர்வு துளிர்விட ஆரம்பித்தது.

### தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிஸார் தாக்குதல்

1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராட்ச்சி மாநாட்டில் அப்பாவித்தமிழ் மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் ஒன்பது அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

### வட்டுக்கோட்டை தீர்மானம்

1976ம் ஆண்டு மே மாதம் வட்டுக்கோட்டையில் தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' என்னும் அமைப்பொன்றை உருவாக்கினார்கள். அத்துடன் தமிழர் சுயாதிபத்தியம் நிலை பெற 10 கோரிக்கைகளை உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்களின் வேறான அரசொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென ''தனிநாட்டு''க் கோரிக்கையை முன்வைத்தனர். அவர்களினது கோரிக்கைகளில் பிரஜா உரிமை, குடியேற்றங்கள், சிங்களம் மட்டும் கொள்கைகள் பௌத்த மதத்தின் நிலைமை, போதுமான தொழில்வாய்ப்பின்மை, கல்விக்கானவாய்ப்புகள்அருகி வருதல், காணி வழங்கும் போது அதனை ஒடுக்குதல், பொருளாதார வாழ்க்கையில் அந்நியப்படுத்தல், தமிழ் பிரதேசங்களில் பெரும் தொழிற்சாலைகள் இன்மை, இதன் மூலமாக தமிழ் மக்களின் வாழ்வுக்குரிய அச்சுறுத்தல், தென் இந்தியாவுடனான தொடர்புகள, உறவுகளை முறிப்பதற்காக இலங்கை வாழ்தமிழர்களின், கல்வி மற்றும் கலாச்சாரங்களை வளர்ப்பதற்குரிய வாய்ப்புக்கள் நிராகரித்தல், தமிழ் மக்களுக்கெதிரான இனவாத துன்புறுத்தல்கள், இராணுவ பொலிஸ் பயங்கரவாதம், ஊடாக துன்புறுத்தல்கள், இளைஞர்களை பயங்கரவாதத்திற்கு உட்படுத்தல், சித்திரவதை செய்தல், வழக்கின்றி பொய்யான குற்றச்சாட்டுக்கள் மீது சிறைப்படுத்தல், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களைப் பெரும் எண்ணிக்கையில் கைது செய்து தடுத்து வைத்தல், சுதந்திரமான பேச்சு வார்த்தை இன்றி தமிழ் மக்களின் எதிர்ப்பின் கீழ் சிங்கள இனவாதத்திற்கு பாத்திரமான பாராளுமன்றத்தில் அவசர கால நிலமையின் கீழ்தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு மாற்றம் என ''தனிநாட்டு'' கோரிக்கைக்கான பிரகடனமாக தெரிவித்திருந்தனர்.

இத்தனை விடயங்கள் தொடர்பாகவும் அரசின் ஒத்துழைப்புடன் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வி அடைந்த காரணத்தினால் ''தனிநாட்டு'' தீர்மானத்தை எடுக்க வேண்டி ஏற்பட்டது. எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அறிவித்தனர்.



டட்லி சேனநாயக்கா

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1977-ம் ஆண்டு நடைபெற்ற யூலைத் தேர்தலில் வடக்குக்கிழக்குப் பிரதேசங்களில் 17 தொகுதிகளில் 16 தொகுதிகளில் வெற்றி பெற்றதோடு தனிநாட்டு கோரிக்கைக்கு தமிழ் மக்களின் அங்கீகாரத்தை பெறுவதற்காக அதனைத் தேர்தலுக்கு முன் வைத்த ஒரே கோரிக்கை என அவர்கள் குறிப்பிட்டனர்.

இத் தேர்தலின் மூலம் தமிழ்க் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி முதற்தடவையாக தமிழ்க் கட்சியொன்று எதிர்க்கட்சியானதுடன் தமிழ்த் தலைவர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவருமானார். இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியடைந்ததே இதற்குக் காரணமாகும்.

(தொடரும்)

## ஸ்கந்தஹோமம் நாளை

உசன் கந்தசாமி ஆலய வருடாந்த ஸ்கந்தஹோமம் நாளைக் காலை 8. 30 மணி முதல் ஆலயப்பிரதம குரு தலைமையில் நடைபெறும்.

## ( சாயி அருளமுதம் )

### பெண்கள் பக்தியின் வடிவம்



பெண்கள் பக்தியின் வடிவம், பக்தி என்றால் அன்பு. எல்லோரும் தெய்வத்தின் குழந்தைகளே. ஆத்மதத்துவத்தை உணர்ந்து கொண்டால் விளங்கும். ஆத்மாவுக்கு ஆண், பெண் என்ற பேதம் கிடையாது. எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்தல் வேண்டும். எல்லாமே இறைவனுடையது. எல்லாம் இறைவனின் சிருஷ்டி. ஆகையால் கடவுள் உனது old friend அந்த old friend 1 gold friend

இந்நாளை நண்பர்கள் அப்படியில்லை. கணத்துக்குக் கணம் மாறுகிறார்கள். ஆனால் கடவுள் அவ்வாறில்லாமல் உன்னுடன், உனக்குள்ளே, வெளியே, மேலே, கீழே உன்னைச் சுற்றியிருந்து எப்போதும் காப்பாற்றுகிறார். அப்படிப்பட்ட கடவுளிடம் அன்பு செலுத்துங்கள். அவரிடம் பக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள். அதுதான் நம் வாழ்க்கையின் குறிக்கோள்.

- பாபா.

# இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இலங்கைக்கு உதவ நோர்வே தயார்!

## தூதுக்குழு தெரிவித்தது

'இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இலங்கை அரசுக்கு நோர்வே அரசாங்கம் உதவும்' என்று இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே நாட்டைச் சேர்ந்த தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில் 'இனப் பிரச்சினைக்குத்தீர்வு காணும் அரசின் முயற்சி வெற்றியடைய வேண்டுமாயின் அதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை நடத்துவது அவசியமாகும்' என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பாக சகல அரசியல் கட்சிகளுக்கும் இடையே ஓர் இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னர் அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் எனப்பதில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

(கு-7)

### பாலியல்...

குழந்தைகளும் நடு இரவில் தெருவால் அழைத்துச் செல்லப்பட்டுள்ள அருவருக்கத்தக்க செயற்பாடுகள் மாபெரும் மனித உரிமை மீறலாகும்.

அரசியலமைப்பு 13 (1), 13 0 சரத்துக்களின் பிரகாரம் இத்தகைய செயல்கள் அடிப்படை உரிமைகள் மீறலாகும் என்று கொள்ள வேண்டியுள்ளது.

இதே போல ஒரு நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அனுரா பண்டாரநாயக்காவுக்கு நடந்த போது அவர் மேல்நீதிமன்றில் மனுத் தாக்கல்செய்திருந்தார் மனு மீதான விசாரணைகளின் பின் சம்பவம் அடிப்படை உரிமைமீறல் எனதீர்ப்பளிக்கப்பட்டதோடு மானநஷ்டமும் வழங்கப்பட்டது,

தமிழர்களை மிருகங்கள் கள் போல ; மூன்றாந்தர பிரஜைகளாக நடத்தும் கொடுமைகளை இந்த நாட்டில் யாரிடமும் முறையிட முடியாது. ஐ. நாவிடமே முறையிட வேண்டும். நாகரீகமான எந்தச் சமூகத்திலும் அப்பாவி மக்கள் இவ்வாறு கீழ்த்தரமாக நடத்தப் படுவதில்லை.

இத்தகைய சம்பவங்கள் வன்மையாகக்கண்டிக்கப்பட வேண்டியவை ஆகும்'' என்று அதில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நிகழாது பார்த்துக்கொள்ளுமாறு பொலீஸ்மா அதிபரையும், படைத்தளபதியையும் விநாயகமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (கு-வ)

# வீரசிங்கம் மண்டபத்தில் உயர் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக வெள்ளி கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபைக்கு சொந்தமானவீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாண உயர் நீதிமன்றத்தை அமைப்பது தொடர்பாககலந்துரையாடுவதற்காக யாழ். மாவட்ட நீதிமன்றத்திற்கு வருமாறு யாழ்ப்பாணக் கூட்டுறவுத் தலைவருக்கு மாவட்ட நீதிமன்றிலிருந்து கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றப் பதிவாளர் அண்ணா ராஜேந்திரத்தினால் கூட்டுறவுச்சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கபட்டுள்ள கடிதத்தில்யாழ் உயர் நீதிமன்றத்தைவீரசிங்கம்மண்டபத்தில் அமைப்பது தொடர்பாக நீதிவான் ஆர். ரி. விக்கினராஜாவுடன் அவசரமாகச் சந்திக்குமாறுவேண்டுகிறேன் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயற்றிட்ட நிர்வாக உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 28ம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றத்திலுள்ள நீதிவான் அறையில் நடைபெறும், குறிப்பிட்ட தினத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக்கடிதத்தின் பிரதிகள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர், யாழ். மாவட்ட அரச அதிபர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இந்தக் கட்டடத் தொகுதியின் புனரமைப்புப்பணிகளில் பெரும்பங்கெடுத்த கூட்டுறவாளர்கள் இந்தக் கட்டடத்தில் நீதிமன்றம் அமைப்பது தொடர்பாகத் தமது அதிருப்தியினை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது தெரிந்ததே. [கு-வ]

### இராணுவ...

தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறியுள்ளதாக வவுனியாவில் சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இதேவேளை

காணிகளை இழந்து வெளியேறிய மக்கள் அயலிலுள்ள கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இது விடயமாக வவுனியா அரச அதிபர், பிரதேச செயலாளர், இராணுவ அதிகாரிகள் மற்றும் புளொட் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் பாதிக்கப்பட்ட விவசாயமக்களுடைய விபரங்களும் பிரதேச செயலாளரால் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

### வன்னிக்...

லும் பொருட்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தாலும் 379 லொறிகளே அனுமதிக்கப்பட்டுள்ளன.

பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவி வரும் வன்னிப் பகுதிக்கான உணவு விநியோகம் கடந்தபல வருடங்களாக சீரற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும் [கு-வ

## தமிழர் ஆசிரியர் சங்கம் உதவி

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து மடு அகதிகள் முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்குவதற்கென தமிழர் ஆசிரியர் சங்கம் ஒரு தொகுதி உடுபுடவைகளையும் சிறுவர்களுக்கான பால்மா வகைகளையும் வழங்கியுள்ளது.

திருமலை மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட உடுபுடவைகளையும் பால்மா வகைகளையும் நேற்றுக் காலை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் வைத்து சங்கச் செயலாளர் ரீ. மகாசிவம் வவுனியா அரச அதிபர் கே. கணேசிடம் ஒப்படைக்கப்பட்டது.

### வவுனியாவில்...

கடந்த 20 ஆம் திகதியிலிருந்து காணாமல் போன காத்தார் சின்னகுளத்தை சேர்ந்த 48வயதான கனகசபை சுப்பிரமணியம் என்பவரே வவுனியா பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரைக் காணவில்லை என இவரது மகள் ஆணைக்குழு அருவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதேவேளை வவுனியாவில் மனித உரிமைகள் பேணப்படுவதுதொடர்பாக இணைப்பதிகாரி வவுனியா அரச அதிபருடன் அண்மையில் சந்திப்பொன்ன மேற்கெண்டதாக அறியப்படுகின்றது. (கு)

### குமார் கொலை...

என்ற சிங்கள இளைஞனின் சாயலை ஒத்திருந்த இளைஞர் ஒருவர் மட்டக்குழியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஆனால் குமாருடன் தொடர்புகளை வைத்திருந்த சந்தேக நபர் சாந்த இவர் இல்லை என்பது விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

குமார் பொன்னம்பலத்தின் வீட்டு வேலைக்காரர்கள் சிவா, தோமஸ் ஆகியோருக்கு சாந்தவை தெரியும் என்பதால் அடையாள அணிவகுப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்ட போது குமாருடன் தொடர்புடைய சாந்த இவர் இல்லை என்று அவர்கள் கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விசாரணைகள்தொடர்ந்து நடைபெறுகின்றன.

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
பிரபு, ரோஜா நடித்த
'திருநெல்வேலி'
(நேரடி CD)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயானியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

கிறிஸ்ரல்
சென்ரர்
நெல்லியடி [ம.ம.வி]
2000 A/L
கிரயக் கணக்கு
யாழ் ஆசிரியர்
திரு. பாலா
ஆரம்பம் 29-01-2000
மு.ப.11.00 மணிக்கு
(00120)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சுகாதாரப் பரிசோதகரை தாக்கியோர் உடன் கைது செய்யப்பட வேண்டும்

## நல்லூர் பி. ச. தலைவர் கோரிக்கை

கோண்டாவில் ஸ்ரேசன் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. முருகதாஸ் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நல்லூர் பிரதேச சபைத் தலைவர் திரு. க. மணிபல்லவராஜன் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்ட அவர் தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடன் கைது செய்யப்பட வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் மற்றும் ஊழியர்களும் வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.]

இத்தகைய சம்பவங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஏனைய பகுதிகளில் கடமையாற்றும் சுகாதாரப் பரிசோதகர்களும் ஊழியர்களும் தமது பணியை சரிவர நிறைவேற்ற முடியாது என்பதனால் இது விடயம் தொடர்பாக 511,513 பிரிவு இராணுவ பொறுப்பதிகாரிகளுடனும் தாம் தொடர்பு கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதாரப் பரிசோதகருடன் இணைந்து நல்லூர் பிரதேச சபையைச் சேர்ந்த இரு தொழிலாளிகளும் கடமையில் ஈடுபட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந)

## கோண்டாவில் ஸ்ரேசன் பகுதியில்

# பொது சுகாதாரப் பரிசோதகர் கும்பலொன்றினால் தாக்கப்பட்டார்

கோப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் கோண்டாவில் ஸ்ரேசன் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம் பெற்றுள்ளது,

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நேற்றைய தினம் கோண்டாவில் ஸ்ரேசன் பகுதியில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் பணியில் அப்பகுதிச் சுகாதாரப்பரிசோதகர் ஈடுபட்டதாகவும் அச்சம்பவம் அங்கு கூடிய கும்பல் ஒன்று பொது சுகாதாரப் பரிசோதகரைப் பொல்லுகள் தடிகள் கொண்டு கடுமையாகத் தாக்கியதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு தாக்குதலுக்குள்ளான பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். முருகதாஸ் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் உள்ள கடைகளில் இருந்த காலாவதியான பொருட்கள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் இப்பணியை காயமடைந்த பரிசோதகரே முன்னின்று செயற்படுத்தியதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# வரதர் கட்சி உறுப்பினர் என்பதற்கு அவரிடம் அடையாள அட்டை இல்லையே

## வரதருக்கு சுரேஷ் கடிதம்

(கொழும்பு)

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட வரதராஜப் பெருமாள் கட்சியில் இருந்ததற்கு எந்த வித ஆதாரங்களும் அவரிடமில்லை. கட்சி அடையாள அட்டை அவருக்கு வழங்கப்படவில்லை முன்னர் வழங்கப்பட்டிருந்த அடையாள அட்டை காலாவதியானதாகும் என்று அக்கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கின்றார்.

வரதராஜப் பெருமாள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பாக வரதராஜப் பெருமாளுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் எழுதிய கடிதங்களில் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது. (கு-வ)

## 110 தபால் பொதிகள் வந்தன

திருகோணமலையிலிருந்து காங்கேசன் துறைக்கு வந்த செஞ்சிலுவைச்சங்க நேயாளர் கப்பல் மூலம் பிறமாவட்டங்களிலிருந்து 110 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திற்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

### இனப்பிரச்சினை ...

பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் இருதரப்புக்களிடையேயும் ஒரு இணக்க நிலை ஏற்படுத்துவதன் மூலமே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டதாக கொழும்பிலிருந்து வெளியாகும்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கனேடிய வெளிநாட்டமைச்சின் தென் ஆசியப் பிரதிநிதி றொபேர்ட் பேர்ட்லி மற்றும் கனேடிய தூதரகத்தின் முதலாவது செயலாளர் கிளைம்கொட்ஜிங் ஆகியோரைக்கொண்ட தூதுக்குழு நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இவர்கள் மட்டக்களப்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் சமயத்தலைவர்கள் படையதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அந்த சந்திப்பின்போதும் விடுதலைப்புலிகளுடன்பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கம் காண்பதே நிரந்தரமான தீர்வுக்கு வழிகோலும் என்று கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளையில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் இரு வெளிநாட்டுத் தூதுக்குழுக்களையும் தனித்தனியாகச் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் மேற்கொள்வதற்குப் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். (கு-வ)

(கனேடியத்தூதுக்குழுவின் மட்டக்களப்பு விஜயம் பற்றி முந்திக்கிடைத்த செய்தி3ஆம் பக்கத்தில்)